[23rd November 1963

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) G.C.I.M., L.I.M. போன்ற கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள 'A' வகுப்பு மருத்துவர்கள் முறையான மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப் படுகின்றனர். 'A' வகுப்பு மருத்துவர்கள் கிடைக்காமற்போனால், சில கிராம சித்த வைத்திய மருந்துசாலைகளில் B&C வகுப்பு மருத்துவர்கள் மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

(இ) சித்த வைத்திய மருத்துவச்சாலைகளில் பணிபுரிபவர்கள் தேவையான கல்வித் தகுதியைப் பெற்றிருந்தால், அந்த மருத்துவச் சாலைகள் இங்கிலீஷ் வைத்திய மருந்துச்சாலைகளாக மாற்றப்பட்ட 10-00 a.m. பிறகுகூடத் தொடர்ந்து வேலையிலிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

(உ) திருவாரூர் முனிசிபல் கவுன்சில் விஜயபுரத்திலும் கொடிக்கால்பாளையத்திலும் நடத்தும் முனிசிபல் சித்த வைத்திய மருந்துச்சாலைகளை இங்கிலீஷ் வைத்திய மருந்துசாலைகளாக மாற்ற முறையே 1960-லும், 1963-லும் அனுமதி வழங்கப்பட்டது.

(ஏ) அங்குள்ள பார்மசிஸ்டுகள் இங்கிலீஷ் வைத்திய மருந்துச் சாலைகளில் பணியாற்றத் தகுதி பெற்றவர்களாக இருந்தால், அவ்வாறு மாற்றப்பட்ட இங்கிலீஷ் வைத்திய மருந்துச்சாலையில் அவர்கள் தொடர்ந்து பணியாற்றலாம்.

திரு. சி. ம. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, திருவாரூரில் இருந்த சித்த வைத்திய டிஸ்பென்சரியை, மாடர்ன் வைத்திய டிஸ்பென்சரியா மாற்றியபொழுது அங்கிருந்த எல்.ஐ.எம். டாக்டர்களுக்கு மூன்று மாத பயிற்சி அளித்து மீண்டும் அதே ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறார்கள். அதுபோல அங்கிருந்த சித்த வைத்திய பார்மஸிஸ்ட்டுகளுக்கும் மாடர்ன் வைத்திய முறையில் பயிற்சி கொடுத்து அவர்களை அங்கேயே வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அவ்வாறு பயிற்சி சித்த வைத்திய டாக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டது போல், பார்மஸிஸ்ட்டுகளுக்குக் கொடுப்பது முடியாது.

திரு. வி. எஸ். எஸ். மணி: சார், ஒரு ஆண்டுக்கு முன்பாக சித்த வைத்தியத் தேர்வு நடைபெற்றது. அதன் முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை. எப்பொழுது வெளியிடப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும் என அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டம்

*486 **கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இப்போது தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பணி புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை என்ன?

23rd November 1963]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Particulars of staff employed in this State under the National Malaria Eradication Programme are as follows:—

Gazetted	31
Non-Gazetted including Mazdoors	7,912

திரு. மு. சண்முகம்: சார், தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை எவ்வளவு? நம் அரசாங்கத்தில் இருந்து எவ்வளவு செலவிடப்படுகிறது? மத்திய அராங்கத்தில் இருந்து எவ்வளவு கொடுக்கப்படுகிறது? அமெரிக்க அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார்; ஏற்கனவே 1954-55-ல் ஒதுக்கப்பட்ட தொகை ....

MR. DEPUTY SPEAKER: Questions 487 and 488 may also be answered now as they relate to the same subject.

*487 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க சர்க்காரால் மலேரியா ஒழிப்பிற்காக கொடுக்கப்பட்ட தொகையில் நம் மாநிலத்திற்கு கிடைத்த பங்குத் தொகை எவ்வளவு?

(இ) 1962-63-ல் இம் மாநிலத்தில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 1962-63-ல் U.S.A.I.D. (T.C.M.) -ல் இருந்து வண்டிகள், மருந்துகள், மற்ற சாதனங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை இலவசமாகப் பெற்ற வகையில் நமது மாநிலத்திற்குக் கிடைத்த உதவியின் தோராய மதிப்பு ரூ. 16.53 லட்சமாகும்.

(இ) இத்திட்டத்திற்காக 1962-63-ல் செய்த தோராய செலவு ரூ. 105.03 லட்சம் ஆகும்.

*488 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the pupils of an elementary school at Tiruchirappalli were affected by taking anti-malaria pills distributed to them under the National Malaria Eradication Programme in June 1963; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சபையில் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

---

[a] 778-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.